மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.எல்

மாவட்ட உரிமையியல் நீதிபதி

சூலூர்

2024 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 31 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடை மனு எண்.2/2024

அசல் வழக்கு எண்.10/2024

திருமதி.சுப்பாத்தாள் ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. திரு.நாச்சிமுத்து

2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்

கோயமுத்தூர்

3. வட்டாட்சியர் அவர்கள்

சூலூர்

4. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,

கரவழி மாதப்பூர்

5. தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்காக

(முந்தைய தமிழ்நாடு மின்சார வாரியம்)

உதவி பொறியாளர், சோமனூர்

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 10.12.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரபாகரன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

இந்த வழக்கு நடைபெறும் காலத்தில் முறையான சட்டவிதிகளின் படி அன்றி மனுச் சொத்தில் எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய முகவர்களோ, ஆட்களோ அல்லது எவ்வித வகையிலும் அவர்களின் அதிகாரம் பெற்றவர்களோ மனுதாரரின் மனுச் சொத்தின் அனுபவத்தினையும், சொத்துரிமையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கியும், இந்த மனுவின் விசாரணைக் காலத்தில் முறையான சட்டவிதிகளின்படி அன்றி வழக்குச் சொத்தில் எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய முகவர்களோ, ஆட்களோ அல்லது எவ்வித வகையிலும் அதிகாரம் பெற்றவர்களோ மனுதாரரின் வழக்குச் சொத்தின் அனுபவத்தினையும் சொத்துரிமையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க கோரியும் மனுதாரரால் கட்டளை 39 விதி 1 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>

1.1). வழக்கு சொத்தானது கரவழி மாதப்பூர் கிராமம், கிராம நத்தம் க.ச.எண்.317/21 என்ற சர்வே புலத்தில் அமைந்துள்ள சயிட் எண்.55 ஆனது 2 மற்றும் 3 பிரதிவாதிகளால் வகைப்படுத்தப்பட்டுள்ள மனையிடமாக இருக்கின்ற வழக்கு சொத்தானது மனுதாரர்/வாதியின் கணவரால் மனுதாரர்/ வாதியுடன் கூட்டாக வெகுகாலமாக அனுபவிக்கப்பட்டு வந்து 20.11.1986 அன்று வட்டாட்சியர் திருப்பூர் அவர்கள் வழங்கிய உத்திரவு நமூனா (பட்டா) வழங்கப்பட்டு மனுதாரர்/வாதியின் கணவர் பழனிக்கவுண்டர் காலம்

செல்லும் வரை அவருடைய அனுபவத்தில் இருந்து வந்தது. 23.02.2005 அன்று மனுதாரர்/வாதியின் கணவர், மனுதாரர்/வாதியின் மகன்கள் கருப்புச்சாமி, பழனிச்சாமி, மகள் பச்சையம்மாள், மனுதாரர்/வாதி ஆகியோரை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார்.

1.2). மனுதாரர்/வாதி வழக்கு சொத்தில் தனியாக வசித்து வருகிறார். வழக்கு சொத்து கிராம நத்தத்தில் அமைந்துள்ளது. கிராம நத்த நிலம் என்பது நத்தம், நத்தம் புறம்போக்கு ஆகிய எல்லா வகைப்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இந்த கிராம நத்த நிலங்களின் உரிமை தொடர்பாக முடிவெடுக்க 2, 3, 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. வழக்கு சொத்து அமைந்துள்ள கிராம நத்த பகுதி கள்ளிப்பட்டி வலவு என்று அழைக்கப்பட்டது. இந்த கள்ளிப்பட்டி வலவு பகுதியில் பல்வேறு கிராம மக்கள் கைப்பற்றி ஆக்கிரமித்து வசித்து வருகின்றார்கள். 1ம் பிரதிவாதி திரு.நாச்சிமுத்து வழக்குச் சொத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிராம நத்தத்தின் கைப்பற்றுதாரர் ஆவார்.

1.3). 1ம் பிரதிவாதி திரு.நாச்சிமுத்து வழக்குச்சொத்து தொடர்பாக வழக்கு தொடர்ந்திருப்பதாகவும் அது அசல் வழக்கு எண்.262/2004 என்ற எண்ணாக அப்போதைய அதிகார வரம்பின் படி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பல்லடம் முன்பாக நடந்த அந்த வழக்கில் 2009ம் ஆண்டு மாண்புமிகு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் படி பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்றும் பிரச்சனை செய்து வருகின்றார். மனுதாரர்/வாதி படிப்பறிவற்றவர். மேலும் நீதிமன்ற நடைமுறைகளை புரிந்து கொள்வதற்கு போதிய சட்ட ஞானமும் இல்லாதவர். மனுதாரர்/வாதியின் கணவர் இறந்த பிறகு அவசியத்தரப்பினரான வாதியை வழக்கில் இணைக்காமல் 1ம் பிரதிவாதி உண்மையை மறைத்து மாண்புமிகு நீதிமன்றத்தை ஏமாற்றி 23.04.2009 அன்று மனுதாரர்/வாதியின் கணவருக்கு எதிராக தீர்ப்பும் தீர்ப்பாணையும் பெற்றுள்ளார். மனுதாரர்/வாதியின் கணவரின் சட்ட பிரதிநிதியாக மனுதாரர்/வாதியை சேர்க்க எந்த மனுவும் செய்யவில்லை. எனவே

மனுதாரர்/வாதியின் கணவரைப் பொருத்து மேற்படி வழக்கில் வழக்கு துணிவு ஏற்பட்டுவிட்டது. எனவே மேற்படி வழக்கின் தீர்ப்பு மனுதாரர்/வாதியை கட்டுப்படுத்தாது.

1.4). இந்த சூழ்நிலையில் 1ம் பிரதிவாதியின் சட்ட விரோத தூண்டுதலில் 5ம் பிரதிவாதியின் அலுவலர் 04.01.2024 அன்று வழக்குச்சொத்தின் மின் இணைப்பை முறையான எவ்வித முன் அறிவிப்பும் இன்றி துண்டித்துள்ளார். அசல் வழக்கு எண்.262/2004 ன் தீர்ப்பாணையில் மின் இணைப்பு வழங்க கூடாது என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

1.5). மனுதாரர்/வாதி கிராம நத்தத்தில் அமைந்துள்ள இந்த வழக்கு சொத்தில் சொத்து வரி, இதர வரிகளை செலுத்தி குடிநீர் இணைப்பும், மின் இணைப்பும் பெற்று 35 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தையொட்டி வடபுறமாக ஆக்கிரமித்து அனுபவித்து வரும் அவரது பூமிக்கு சொத்தின் வடபுறம் தார் சாலை உள்ளது. இந்த சொத்தின் தென்புறம் அதாவது வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித பாத்யதையும் வசதியுரிமையும் ஆவணப்படியோ அனுபவப்படியோ கிடையாது. 1ம் பிரதிவாதியின் வழக்கு உறுத்துக்கட்டளை வழக்கு என்பதால் பழனிக்கவுண்டர் இறந்தவுடன் முடிவுக்கு வந்துவிட்டது.

1.6). எனவே முறையான சட்டவிதிகளின் படி அன்றி வழக்குச் சொத்தில் எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய முகவர்களோ, ஆட்களோ அல்லது எதிர்மனுதாரர்களிடம் எவ்வித வகையிலும் அதிகாரம் பெற்றவர்களோ வழக்குச் சொத்தில் மனுதாரர்/வாதியின் அனுபவத்தினையும் சொத்துரிமையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவினை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார். மனு

அனுமதிக்கப்பட வேண்டும்.

2). 1 ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை எதிர்மனுவாக தாக்கல் செய்துள்ளதன் சுருக்கம்:

2.1). வாதியின் கணவர் பழனிக்கவுண்டருக்கு 20.11.1986 ல் தாவா சொத்திற்கு வருவாய் துறையில் பட்டா கொடுத்தது உண்மை. ஆனால் மேற்படி பட்டாவானது செங்கத்துறை கிராமம் கிழமேல் 25 அடி அகல தடத்திற்காக விடப்பட்ட இடம் ஆகும். அதனை வருவாய் துறையினர் தவறுதலாக பழனிக்கவுண்டர் பெயரில் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் தடத்தினை அடைத்து வாதியின் கணவர் கட்டிடம் அமைக்க தற்காலிக செட் அமைத்தார். பொது பாதைக்கு வடபுறம் தான் 1 ம் பிரதிவாதியின் வீடு உள்ளது. எனவே 1 ம் பிரதிவாதி வருவாய் துறையினருக்கு பல முறை மனு அளித்தார். அதில் வாதியின் கணவர் பழனிக்கவுண்டருக்கு பொது பாதையில் பட்டா கொடுத்து இருப்பதால் அதனை ரத்து செய்ய பல மனுக்கள், வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தும் பட்டா ரத்து செய்யாததால் பல்லடம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.262/2004 வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் சின்னபழனிக்கவுண்டருக்கு கொடுத்த பட்டாவினை ரத்து செய்யவும், மேற்படி சொத்திற்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து இருந்தார்.

2.2). அந்த வழக்கில் கரவழிமாதப்பூர் கிராம நிர்வாக அலுவலர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பின் உரிய விசாரணைக்கு பின் தான் 2009 ம் வருடம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் பின் 2010 ம் ஆண்டு வரை சின்னபழனிக்கவுண்டர் பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யாததால் 1 ம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியருக்கு 2010 ம் ஆண்டு மனு செய்தார். அதன் பின் 262/2004 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை செயல்படுத்த 03.06.2010 ல் உத்தரவு செய்தார். அதன் பின் 21.06.2012 ல் சின்ன பழனிக்கவுண்டருக்கு வழங்கப்பட்ட நத்தம் பட்டாவினை ரத்து செய்து

ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின் 26.02.2012 ந் தேதி சூலூர் வட்டாட்சியர், கரவழிமாதப்பூர் கிராம ஊர்நத்தம், க.ச.எண்.317/21 ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற செயல் அலுவலர் கரவழிமாதப்பூர் ஊராட்சிக்கு கடிதம் அனுப்பினார். அதனை 02.03.2015 ந் தேதி கரவழிமாதப்பூர் ஊராட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் 27.05.2013 ந் தேதியே சின்னபழனிக்கவுண்டருக்கு க.ச.எண்.317/21 ல் சின்னபழனிக்கவுண்டருக்கு எழுத்து மூலமாக உத்தரவினை வழங்கி உள்ளார். அதனை வாதியும் அவரது மகன்களும் தான் பெற்றுக் கொண்டு உள்ளனர்.

2.3). தாவா சொத்திற்கான பட்டா ரத்து ஆனது வாதிக்கு 2013 ம் ஆண்டே தெரியும் இருந்தும் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருந்து வந்தார். அதன் பின்னர் தான் 1 ம் பிரதிவாதி 2015 ம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் அதில் எல்லா எதிர்மனுதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதில் எதிர்மனுதாரர்கள் ஆஜராகவில்லை. மேலும் அந்த மனுதாரரும் ஆஜர் ஆகாததால் 24.07.2018 ல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்த 1 ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.6/2021 என்ற மனு தாக்கல் செய்து அந்த மனுவிலும் எதிர்மனுதாரருக்கும் மனு அனுப்பப்பட்டது. அதில் சின்னபழனிக்கவுண்டர் பழனிச்சாமி, கருப்புசாமி ஆகியோருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பினை பெற்றுக் கொண்ட வாதி, தனது கணவர் இறந்த விபரத்தினை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை.

2.4). மேற்படி நிறைவேற்று மனுவை மாவட்ட ஆட்சியர், சூலூர் வட்டாச்சியர், கரவழிமாதப்பூர் கிராம நிர்வாக அலுவலர், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் , சோமனூர் ஆகியோர் ஆஜர் ஆகி வழக்கு நடத்தினர். வழக்கு நிலுவையில் வாதியினை தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சொல்லி 07.09.2023 ல் அறிவிப்பு கொடுத்தனர். அதை கருப்பசாமி 08.09.2023 நேரடியாக பெற்றுக்கொண்டார். அவர்களுக்கு வழக்கு சொத்திற்கான பட்டா ரத்து

செய்யப்பட்ட விபரம் 2013 வருடமே தெரியும். வேறு எந்த மேல் நடவடிக்கையும் எடுக்காமல் வாதி தற்போதே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வருவாய் துறையில் பட்டா ரத்து செய்யப்பட்ட பின்னிட்டுதான் 5ம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவின் பேரில் மின் இணைப்பை துண்டிப்பு செய்தார். பட்டா ரத்தாகி 10 வருட காலம் விட்டுவிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தற்பொழுது மின் இணைப்பை துண்டிப்பு செய்தவுடன் பழைய வழக்கு பற்றி அவருக்கு தெரியாது என சங்கதிகள் சொல்லி இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். சின்னபழனிக் கவுண்டருக்கு கருப்பசாமி, பழனிச்சாமி, பச்சையம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். தற்போதைய நிலையில் வழக்கு சொத்தானது பொதுப்பாதை ஆகும். அதற்கு யார் பெயரிலும் பட்டா இல்லை. எனவே மின் இணைப்பு கேட்டு செயலுறுத்துப் பரிகாரம் கோரியுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்காது.

2.5). மேலும் சின்னபழனிக்கவுண்டர் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்த பின்னிட்டு அவரது வாரிசுகள் பெயரில் பட்டா மாற்றம் கேட்டு நடவடிக்கை எடுக்காமல் மின் இணைப்பு மட்டும் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ள முடியாது. வாதிக்கு தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சொத்திற்கு பட்டா உள்ளது. அங்கு அவர் வீடு கட்டி குடியிருக்கிறார். இந்த தாவா சொத்தில் அவர் தென்னை ஓலை மறைப்பு அமைத்து ஓடு போட்டு மறைத்து ஆக்கிரமிப்பு செய்து வைத்துக்கொண்டு அதில் சொத்து வரி, குடிநீர் இணைப்பு இருப்பதாக நீதிமன்றத்தை ஏமாற்றுகிறார். வழக்கு சொத்திற்கு மேல்புறமாகவும், பொதுப்பாதைக்கு தென்புறமாக உள்ள வீட்டிற்கு தான் பட்டா சொத்து வரி, குடிநீர் இணைப்பு உள்ளது.

2.6). 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு வடபுறமாக பூமி உள்ளது. அதில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி பூமிக்கு தென்புறம் மண் ரோடும், வடபுறம் தார் ரோடும் உள்ளது. 1ம்

பிரதிவாதி வீட்டிற்கு தென்புறம் உள்ள மண் ரோட்டைதான் வாதி ஆக்கிரமிப்பு செய்து கொண்டு மின் இணைப்பு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் பெற்ற பட்டா மற்றும் மின் இணைப்பு நீதிமன்ற உத்தரவு மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே தற்பொழுது வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டனை பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல.

3). தீர்வுக்குரியப் பிரச்சனை:

கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4). பிரச்சனைக்குத் தீர்வு:

4.1). இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தான் ஒரு பழனிக்கவுண்டரின் வாரிசுகள் என்றும் வழக்கு சொத்து கரவழிமாதப்பூர் கிராமம் நத்தம் புல எண்.317/21 ல் அமைந்துள்ளது என்றும், அதற்கு வாதியின் கணவன் பெயரில் 20.11.1986 ல் வருவாய் பட்டா வழங்கப்பட்டது என்றும், அதன் பின்னிட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வந்த சொத்தை 1 ம் பிரவாதி நாச்சிமுத்து 262/2004 என்ற அசல் வழக்கை தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட நிறைவேற்று மனு மூலம் நீதிமன்றத்தை ஏமாற்றி பழனிக்கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து அந்த வீட்டிற்கு கொடுக்கப்பட்டிருந்த மின் இணைப்பையும் கடந்த 04.01.2024 ல் துண்டிக்கப்பட்ட உடன் இந்த வழக்கை மேற்படி துண்டித்த மின் இணைப்பை மீண்டும் வழக்கு சொத்திற்கு கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4.2). மேற்படி 1 ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கு எண்.264/2004 தீர்ப்பில் ஏற்பட்ட நிறைவேற்று மனு உத்தரவின் பேரில்தான் வாதியின் கணவர் பெயரில் உள்ள பட்டா பெயர் நீக்கம் செய்யப்பட்டது என்றும், அதன் தொடர்ச்சியாகதான் வழக்கு சொத்தில் இருந்த மின் இணைப்பு

துண்டிக்கப்பட்டது என்றும், இவை அனைத்தும் நீதிமன்ற உத்தரவின் பேரில்தான் நடைபெற்றது என்றும், வாதி அவரது கணவர் இறந்த பின்னிட்டு அவர் கணவர் இறந்ததை முன் வழக்கில் தெரியப்படுத்தாமலும், மேற்படி நிறைவேற்று மனுவில் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்காமலும், சட்டப்படி நீதிமன்ற உத்தரவுப்படி மின் இணைப்பை துண்டித்த பின்னிட்டு, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.3). மேற்படி அசல் வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த வழக்கிலும் வாதி செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு அருகதையானவரா என்று சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வழியாக முடிவு செய்யாமல் இடைகால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது. எனவே மேற்படி வாதி கோரிய பரிகாரத்தை அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதை இருதரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்னிட்டே முடிவிற்கு வரமுடியும் என்பதால் இந்த மனுவில் இடைக்கால உத்தரவு எதுவும் வழங்க முடியாது என மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக, மனு முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

Sd/N.Renuga
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.2/2024 in
OS.10/2024 in
Dated: 31.01.2025
DMC, Sulur.